පේරාදෙණිය විශ්වවිද්‍යාලය
பேராதனைப் பல்கலைக்கழகம்
UNIVERSITY OF PERADENIYA

දුරස්ථ හා අඛණ්ඩ අධ්‍යාපන කේන්ද්‍රය
தொலை தொடர் கல்வி நிலையம்
CENTRE FOR DISTANCE AND CONTINUING EDUCATION

ශාස්ත්‍රවේදී සාමාන්‍ය උපාධි පරීක්ෂණය (බාහිර) - අගෝස්තු 2018
பொதுக் கலைமாணி பரீட்சை (வெளிவாரி) - டிசம்பர் 2018
GENERAL DEGREE EXAMINATION IN ARTS (EXTERNAL) - DECEMBER 2018

**Philosophy - II / PHG - II**
**Ethics**
**மெய்யியல் II/ PHG - II**
**ஒழுக்கவியல்**

இவ்வினாத்தாளில் எல்லாமாக **பத்து** (10) வினாக்கள் காணப்படுகின்றன.

எவையேனும் **ஐந்து** (05) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

நேரம்: மூன்று (03) மணித்தியாலம்

---

1. (I) ஒழுக்கவியல் மற்றும் ஒழுக்கம் என்பதை விளக்குக.

   (II) ஒழுக்க மெய்யியலாளர்கள் தீர்ப்பதற்கு முயலும் பிரசசினைகளின் இயல்பை விபரிக்குக.

2. ஒழுக்க மெய்யியலுக்கு கிரேக்க சோபிஸ்டுகளின் பங்களிப்பினை ஆராய்க.

3. பிளேட்டோவின் அல்லது அரிஸ்டோட்டிலின் ஒழுக்க நோக்கினை விமர்சன ரீதியாகப் பரிசீலிக்குக.

4. தண்டனை என்றால் என்ன? பிரதான தண்டனைக் கோட்பாடுகளைக் கூறிச் சுருக்கமாகப் பரிசீலிக்குக.

5. காண்டிய ஒழுக்கவியலில் நீர் காணும் தனித்துவமான பண்புகள் என்ன?

6. ஹிப்போக்ரட்டிக் ஆணையை உதாரணமாகக் கொண்டு வைத்தியத் தொழிலில் நிகழும் ஒழுக்கப் பிரச்சினைகளைப் பரிசீலிக்குக.

<u>ஒன்றில்</u>

7. ஒழுக்க மெய்யியலுக்கான டேவிட் ஹியூமின் பங்களிப்பின் இயல்பினைப் பரிசீலிக்குக.

<u>அல்லது</u>

"நன்மை வரைவிலக்கணப்படுத்த முடியாதது" G.E மூவரின் ஒழுக்கப் பகுப்பாய்வை ஆதாரமாகக் கொண்டு இக்கூற்றினை ஆராய்க.

8. சமயத்திற்கும் ஒழுக்கத்திற்கும் இடையில் அத்தியாவசியத் தொடர்பு உள்ளது என்று கூறுவது சரியா? உமது விடைக்கான நியாயங்களைத் தருக.

9. "கருக்கலைப்பும் ஒழுக்கவியற் பிரச்சினைகளும்" என்பது பற்றி விமர்சன உரை ஒன்றைத் தருக.

10. பின்வருவனவற்றுள் ஏதேனும் **இரண்டைப்** (2) பற்றி சுருக்கக் கருத்துரைகள் தருக.

    I. ஜனநாயக சமூகத்தில் செய்தி ஊடகங்களின் வகிபாகம்.

    II. வன்முறையற்ற சமூகம்.

    III. விளம்பரத்தின் ஒழுக்கவியல்.

    IV. சுயவிருப்பத் தீர்மானமும் நிர்ணய வாதமும்.

    V. அதி - ஒழுக்கவியல் (Meta Ethics)

    VI. சிறுவர் தவறான பிரயோகம் (Child Abuse)